1983 ஜனவரி 29]

தமிழ்நாடு திரையரங்குக் கழகம் மூலம் வழங்கப்பட்ட கடன் தொகை.

*வினா எண். 46—திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தியேட்டர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் (Tamilnadu Theatre Finance Corporation) மூலம் இதுவரை வழங்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு?

(ஆ) இதன் மூலம் பயன்பெற்ற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் எவ்வளவு பேர்கள்?

(இ) தற்சமயம் புது லைசன்ஸ் வழங்குவதை அரசு நிறுத்தியுள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) தமிழ்நாடு திரையரங்குக் கழகம், கிராமப் பகுதிகளில் திரை அரங்குகளை கட்டுவதற்கு 80 நபர்களுக்கு டிசம்பர் 82 முடிய ரூ. 88.00 இலட்சம் கடன் வழங்கியுள்ளது.

(ஆ) இக்கடன் திட்டத்தின் மூலம் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 3 பேர்களும் பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்த 56 பேர்களும் பயன் பெற்றுள்ளனர்.

(இ) தமிழ்நாடு திரையரங்குக் கழகம் தனியார்க்கு அளிக்கும் நிதி உதவி திட்டத்தை தொடர்வது குறித்த செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதால் அரசு கொள்கை முடிவு எடுக்கும் வரை திரையரங்குக் கட்டுவதற்காக நிதி உதவி அளிப்பதை தமிழ்நாடு திரையரங்குக் கழகம் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தியேட்டர் பைனான்ஸ் கார்ப்பொ ரேஷனிடம் இருந்து வாங்கிய கடனை திரும்பிப் பெறுவதிலே பல சிக்கல்கள் ஏற்பட்டு வழக்கு மன்றத்திற்கு சென்றிருப்பதாக தெரிகிறது. அந்தகக் கடன்கள் திரும்பப் பெறப்பட்டதா? அந்த வழக்குகள் எந்த நிலையில் இருக்கின்றன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, இந்த தியேட்டர் கார்ப்பொரேஷன் மூலம் வழங்கப்பட்ட கடன் களிலிருந்து திரை அரங்குகளையெல்லாம் கட்டி முடித்து அவைகளெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற சூழ்நிலையில் கூட, அந்தக் கடன்களை திரும்ப வசூலிப்பதில் ஏற்பட்ட சிக்கல்களை ஒட்டித்தான் கடன் வழங்குவது நிறுத்திவைக்கப்

பட்டிருக்கிறது. ரெவின்யூ ரக்கவரி ஆக்டின் கீழ் வசூலிக்கலாம் என்று முயற்சி எடுப்பதற்குள், அவர்கள் வெகு சாமர்த்தியமாக உயர்நீதிமன்றத்திற்குச் சென்று, அதையொட்டி தடை ஆணை வாங்கி விட்டார்கள். அதற்குப் பிறகு சிவில் வழக்குகள் போடப் பட்டு, இப்போது 3, 4 வழக்குகளில் இந்தக் கார்ப்பொரேஷனுக்கு சாதகமாகத் தீர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதையொட்டி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியேட்டர் கார்ப்பொரேஷன் மூலம் கடந்த $1\frac{1}{2}$ ஆண்டுகளுக்கு மேலாக லைசன்சு பெற்றவர்களில் பாதிப் பேருக்கு கடன்கள்வழங்கப்பட்டு பலபேருக்கு மேற்கொண்டு கொடுக்காமல் அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு காரணம் ஏற்கெனவே கடன் கொடுத்தவர்களில் 80 பேர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்று தடை ஆணை வாங்கியிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தனி ஐ.ஏ.எஸ். அதிகாரி தலைவராக இருந்துக் கொண்டு, தற்போது நிர்வாகம் நடந்துக் கொண்டிருக்கிறது. இனிமேலாவது நல்ல முறையில் நடத்து வதற்கு, இனியும் தொடர்ந்து கடன் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல எண்ணத்தோடு, பொதுமக்களுக்கு, கிராமப்புறத்து மக்களுக்கு வசதிசெய்து கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்த திட்டம் உருவாக்கப்பட்டது, கழகம் அமைக்கப்பட்டது. ஆனால் கடன் வாங்கியவர்களுக்கு அந்த உணர்வு இல்லாத காரணத்தால், நாம் போட்டிருக்கிற முதலே மூழ்கி விடுகிற சூழ்நிலை வந்ததற்குப் பிறகு மீண்டும் அதை நட்டத்தோடு நடத்திக்கொண்டு இருப்பது சரியாகாது என்றுதான் கடன் வழங்குவதை தற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கிறோம். கடன் வாங்கியவர்கள் எல்லாம் கடனைத் திருப்பித் தரவேண்டும் என்ற உணர்வை மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் எடுத்துச் சொல்லி, அவைகளை எல்லாம் பெறுவதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தால், இதை மீண்டும் சிறப்பாக நடத்துவதற்கு வசதியாக இருக்கும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, 88லட்சத்திற்கும் அதிகமாக கடன்கொடுத்திருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். அதிலே கடனை பெறுவதற்கு முன்பாக பலபேர்கள் அதற்குத் தேவையான சர்டிபிகேட்டுகள் வழங்கி யிருப்பார்கள். அந்த சர்டிபிகேட்டுகளிலே பல மோசடிகள் நடைபெற்றிருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா குறிப்பாக அம்பை வட்டாரத்தில் அப்படி மோசடி ஏற்பட்டதா?? அந்த மோசடி சர்டிபிகேட்டுகளை கொடுத்தவர்களின் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

1983 ஜனவரி 29]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல சர்டிபிகேட்டுகள், பல பொறுப்பு பத்திரங்கள் போன்றவைகளையெல்லாம் பெற்றுக்கொண்டுதான் கடனை வழங்கியிருக்கிறோம். கடனை வாங்குகிற வரையில் எதையும் எழுதிக் கொடுக்க தயாராக இருக்கிறார்கள். வாங்கியதற்குப் பிறகு—''கடனை வாங்கி உடம்பை தேற்று, கடனை கொடுத்தவன் வந்து கேட்டால் முதுகை காட்டு'' என்று தமிழ்நாட்டிலே ஒரு பழமொழி உண்டு-அதுபோல் கேட்கும் போது நழுவப் பார்க்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைத்போல ஒன்றிரண்டு சம்பவங்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அவைகள் மீதும் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

திரு. சி. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பைனான்ஸ் கார்ப்பொரேஷன் மூலமாக கடன் வாங்கியவர்களில், ஏற்கெனவே பல தியேட்டர்கள் வைத்துக் கொண்டிருப்பவர்கள் இடம் பெற்றிருக்கிறார்களா? இனிமேல் கடன் வழங்குகிறபோது இப்படி பல தியேட்டர்களை வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு கடன் வழங்குவதை மறுக்க ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, தியேட்டர்களை நடத்திக்கொண்டிருப்பவர்களுக்கு கடன் வழங்க வேண்டும் என்று விதியிலே இல்லை. அப்படி ஒருவேளை அவர்கள் கடன் வாங்கி இருந்தால் முன்னாலேயே இருககின்ற தியேட்டர்கள் அவர்கள் பெயரிலே இருக்காது.

பழவகைகள் அதிக மகசூல் தர வேளாண்மைத் துறை மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு.

*வினா எண் 47—திரு. இல. பலராமன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ''மா'' ''கொய்யா'' போன்ற பயன்தரும் பழவகைகள் அதிக மகசூல் தர வேளாண்மைத்துறை மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை புதிய ரகங்கள் கண்டுபிடிக்கப் பட்டன?

(இ) இவைகள் எந்தெந்த மவட்டங்களுக்கு ஏற்றவை?